முதலாவது  கூடுதல் மாவட்ட உரிமையியல்  நீதிமன்றம், நாகர்கோவில்
நாள். 25.10.2025
O.S.     266 /2014
பிவா.சா.5–சுப்பிரமணியம்
முதல் விசாரணை.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு  அழைப்பாணை வந்தது. நான் 07.09.2025 ம் தேதியிலிருந்து நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரிடம் நேர்முக உதவியாளராக  பணிபுரிந்து வருகிறேன். வசந்தா என்பவர் மூத்த குடிமக்கள் பராமரிப்பு சட்டத்தின் கீழ் 11.05.2015 தேதியில் உதவி கோரி விண்ணப்பித்து இருந்தார். எதிர்மனுதாரராக வசந்தாவின் மகள் சிவகாமியும் பேரன் சதாசிவத்தையும் சேர்த்திருந்தார்.

இது தொடர்பாக மனுதாரர் மற்றும் 2 எதிர்மனுதார்களையும் விசாரித்த போது  வசந்தாவின் கணவர் உயிருடன் இருந்தபோது மகளுக்கும் பேரனுக்கும் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்திருந்தார் என்றும் கணவர் இறந்த பின்பு வசந்தாவை கொடுமைப்படுத்தி மருந்துவ உதவி செய்யாததால் செட்டில் மென்ட் ஆவணத்தை ரத்து செய்ததாக வாக்குமூலம் கொடுத்தார்.

உதவிதொகை எதுவும் கோராததாலும் இந்த அசல் வழக்கு நிலுவையில் இருப்பதாக எதிர்மனுதாரர் வாதம் செய்ததாலும் வசந்தாவின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.  வசந்தா அளித்த மனு, தரப்பினர்கள் அளித்த வாக்குமூலம் மற்றும் உத்தரவு  நகல் ஆகியவற்றை சாட்சி சான்றாவணம் 4 ஆகும்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வசந்தா கொடுத்த மனு அதன் மீதான விசாரணை ஆகியவை என்க்கு நேரடியாக தெரியாது என்றாலும் கோப்பை பாத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியதான். மனுவில் வாழ்க்கை பொருளுதவி கேட்கவில்லை. என்றால் சரி. அந்த மனுவில் வசந்தாவிற்கு போதுமான பொருளுதவி இருப்பதாக கொடுக்கப்பட்டது என்றால் சரி.